அமைப்பதற்குண்டான வழிவகையை மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் செய்வார்கள் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்து அமர்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 115, மாண்புமிகு உறுப்பினர் திரு. எச். வசந்தகுமார், மாண்புமிகு உணவு மற்றும் நுகர்பொருட்கள் வழங்கல் துறை அமைச்சர் அவர்கள்.*

115—

நேரடி கொள்முதல் நிலையம்

***18220—திரு. எச். வசந்தகுமார்:**

மாண்புமிகு உணவு மற்றும் நுகர்பொருட்கள் வழங்கல் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நாங்குநேரி தொகுதி, களக்காட்டில் நேரடி நெல் கொள்முதல் நிலையம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. காமராஜ், உணவு மற்றும் நுகர்பொருட்கள் வழங்கல் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

(அ) மற்றும் (ஆ) திருநெல்வேலி மாவட்டம், நாங்குநேரி தொகுதி, களக்காட்டில் 24–2–2018 அன்று நேரடி நெல் கொள்முதல் நிலையம் திறக்கப்பட்டு, இன்றுவரை 561 மெட்ரிக் டன் நெல் விவசாயிகளிடமிருந்து கொள்முதல் செய்யப்பட்டுள்ளது. தற்பொழுதும் நெல் கொள்முதல் நிலையம் தொடர்ந்து செயல்பட்டுக்கொண்டிருக்கிறது என்பதனை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. எச். வசந்தகுமார் அவர்கள், இருக்கையில் இல்லை. மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜே.ஜி. பிரின்ஸ் அவர்கள்.*

திரு. ஜே.ஜி. பிரின்ஸ்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நாங்குநேரி சட்டமன்றப் பேரவை உறுப்பினர் சார்பாக இந்தக் கேள்வியை நான் கேட்க விரும்புகிறேன். பல*

ஆயிரக்கணக்கான விவசாயிகள் இருக்கக்கூடிய நாங்குநேரி சட்டமன்றத் தொகுதியிலே, முக்கியமாக களக்காடு பகுதியில், நவீன முறையில் பயிர் செய்யக்கூடிய வசதி இல்லாமல் இருக்கிறது. மாண்புமிகு அமைச்சர் அவர்கள், நேரடி நெல் கொள்முதல் நிலையம் அங்கு இருக்கிறது என்று சொன்னார்கள். ஆனால், களக்காட்டிலே வசதியான கொள்முதல் நிலையம் அமைக்கப்படவில்லையென்றுதான் அவர் தெரிவித்திருக்கிறார். அவ்விதமாக கொள்முதல் மையம் இருக்குமேயென்றால், அதை நவீனப்படுத்த வேண்டுமென்று நான் கேட்டு, எதிர்காலத்தில் விவசாயிகளின் நலனைக் கருதி அதை நீங்கள் செய்துதர வேண்டுமென்று மாண்புமிகு சட்டமன்றப் பேரவை உறுப்பினர் திரு. எச். வசந்தகுமார் அவர்களின் சார்பாக நான் இந்தக் கேள்வியைக் கேட்க விரும்புகிறேன். நன்றி.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உணவு மற்றும் நுகர்பொருட்கள் வழங்கல் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. இரா. காமராஜ்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏற்கெனவே நான் குறிப்பிட்டிருக்கிறேன். அங்கே நேரடி நெல் கொள்முதல் நிலையம் செயல்பட்டுக்கொண்டிருக்கிறது. 24 ஆம் தேதி, 2–வது மாதத்திலிருந்து செயல்பட்டுக்கொண்டிருக்கின்ற அந்த நேரடி நெல் கொள்முதல் நிலையத்தில், இதுவரை 561 மெட்ரிக் டன் நெல்தான் கொள்முதல் செய்யப்பட்டிருக்கிறது. இருந்தபோதிலும், விவசாயிகளின் நன்மையைக் கருத்திலேகொண்டு, தொடர்ந்து செயல்படுத்தப்பட்டு வருகின்றது என்பதனை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன். திருநெல்வேலி மாவட்டத்தைப் பொறுத்தவரை, நடப்பு கொள்முதல் பருவத்தில் 42 நேரடி நெல் கொள்முதல் நிலையங்கள் திறக்கப்பட்டு, இன்றுவரை 35,540 மெட்ரிக் டன் நெல் கொள்முதல் செய்யப்பட்டிருக்கின்றது. குறிப்பாக, நாங்குநேரியில், களக்காடு பகுதி உட்பட 16 இடங்களில் நேரடி நெல் கொள்முதல் நிலையங்கள் திறக்கப்பட்டு, 6,818 மெட்ரிக் டன் நெல் கொள்முதல் செய்யப்பட்டிருக்கின்றது என்பதனை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு, மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. மு.பெ. கிரி அவர்கள்.

முற்பகல் 10–50

திரு. மு.பெ. கிரி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, செங்கம், தண்டராம்பட்டு, தானிப்பாடி ஆகிய பகுதிகளில் உள்ள நெல் கொள்முதல் நிலையங்களில் விவசாயிகள் நெல்லைக் கொண்டுபோய் 15 நாட்கள், 20 நாட்கள் காத்திருக்க வேண்டிய நிலை இருக்கிறது. இந்நிலையில் திடீரென்று பெய்த மழையால், அந்த நெல் எல்லாம் நனைந்து ஈரம் அதிகமாகி, முளைத்து விட்டது. எனவே, இதனைத் தவிர்க்க வேண்டும். அந்த நேரடி நெல் கொள்முதல் நிலையங்களில், அவ்வப்போது வரும் நெல்லை உடனடியாகக் கொள்முதல் செய்தால்தான், மாண்புமிகு அமைச்சர் சொல்லும் கணக்கும் கூடுதலாகும். விவசாயிகளுக்கும் உரிய நேரத்தில் பணம் கிடைக்கும். கூட்டுறவுத் துறையின் மூலமாக நேரடி நெல் கொள்முதல் நிலையம் அமைக்கப்பட்டிருந்தாலும், உணவுத் துறையின் மூலமாக நேரடி நெல் கொள்முதல் நிலையம் அமைக்கப்பட்டிருந்தாலும், விவசாயிகள் கொண்டு வந்து தருகின்ற நெல்லை அன்றே எடை போட்டு, உரிய பணத்தை விவசாயிகளுக்கு வழங்க இந்த அரசு முன்வருமா என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் மூலமாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உணவு மற்றும் நுகர்பொருட்கள் வழங்கல் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. இரா. காமராஜ்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த காலங்களில் நெல் கொள்முதல் செய்யும் முறையில் இணை கொள்முதல், லெவி கொள்முதல், ஏகபோக கொள்முதல் என்று இருந்தன. விவசாயிகளின் சிரமத்தைக் கருத்தில்கொண்டு அவற்றையெல்லாம் மாற்றி, மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் 2002 ஆம் ஆண்டு பரவலாக்கப்பட்ட நெல் கொள்முதல் திட்டத்தைக் கொண்டு வந்தார். அதன் அடிப்படையில் நேரடி நெல் கொள்முதல் நிலையங்கள் திறக்கப்பட்டு, விவசாயிகளிடமிருந்து வரக்கூடிய நெல்லை உடனடியாகக் கொள்முதல் செய்வதற்குரிய அனைத்து நடவடிக்கைகளும் எடுக்கப்பட்டு வருகின்றன.

மாண்புமிகு உறுப்பினர் திரு. கிரி அவர்கள், செங்கம் தொகுதியில் உள்ள நேரடி நெல் கொள்முதல் நிலையங்களைப்பற்றி எடுத்துச் சொல்லியிருக்கிறார்கள். அந்த நேரடி நெல் கொள்முதல் நிலையங்களில் உறுப்பினர் குறிப்பிடுவதுபோன்ற நடைமுறைகள் இருப்பதற்கான வாய்ப்பே கிடையாது. நடப்பு நெல் கொள்முதல்

பருவத்தில் மட்டும் டெல்டா, டெல்டா அல்லாத பகுதிகளில் தமிழகத்தில் மொத்தம் 1,447 நேரடி நெல் கொள்முதல் நிலையங்கள் திறக்கப்பட்டன. நெல்லுக்குக் குறைந்தபட்ச ஆதார விலையுடன், மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் அறிவித்துள்ள ஊக்கத் தொகையையும் சேர்த்து, சன்ன இரக நெல்லுக்கு 1,660 ரூபாயும், சாதாரண நெல்லுக்கு 1,600 ரூபாயும் கொள்முதல் விலையாக உடனடியாக வழங்கப்பட்டு வருகின்றன.

மாண்புமிகு உறுப்பினர் திரு. கிரி அவர்கள் சொன்னதுபோல், அந்த நேரடி நெல் கொள்முதல் நிலையங்களில் நிலைமை இப்படி இருந்தால், உடனடியாக உரிய நடவடிக்கைகளை மாண்புமிகு அம்மா அவர்களின் அரசு எடுக்கும் என்பதை இந்த நேரத்தில் தெரிவித்துக்கொள்கிறேன். ஆனால், இந்த ஆண்டு மட்டும் 3,03,196 விவசாயிகள் பயனடைந்திருக்கிறார்கள். விவசாயிகள் தங்கள் நெல்லை விற்றவுடன், ECS மூலம் உடனடியாகப் பணத்தைப் பெற்றிருக்கிறார்கள் என்பதனை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

திருவண்ணாமலை மாவட்டத்தில் 31 நேரடி நெல் கொள்முதல் நிலையங்கள் இயங்கி வருகின்றன. இன்று வரை 32,031 மெட்ரிக் டன் நெல் கொள்முதல் செய்யப்பட்டு, அதற்குரிய பணத்தை உடனுக்குடன் வழங்கிட வேண்டுமென்ற அடிப்படையில் விவசாயிகளுக்கு அன்றாடம் வழங்கப்பட்டு வருகின்றது என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா வரிசை எண் 116, மாண்புமிகு உறுப்பினர் திருமதி ப. மனோன்மணி, மாண்புமிகு கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர் அவர்கள்.

116—

ஜவுளிப் பூங்கா

***6059—திருமதி ப. மனோன்மணி:**

மாண்புமிகு கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வீரபாண்டி தொகுதி, எளம்பிள்ளையில் ஜவுளிப் பூங்கா அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?